**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 29.07.2025</u>**

**OS.176/2017**

**வா.சா.4 திரு.தமிழன்**

**வா.சா.4 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு வாதி மற்றும் பிரதிவாதிகளை தெரியும் என்றால் சரிதான். ஒரு ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டதாக சொல்லும்போது அது எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் தேதி எனக்கு நினைவில்லை, மாதம் 7 அல்லது 8 ஆவது மாதமாக இருக்கும் வருடம் 2016ம் வருடம். அந்த ஒப்பந்த பத்திரம் கடனுக்காக எழுதப்பட்டது என்றால் இல்லை, நிலம் வியாபாரம் பேசி அதற்காக எழுதப்பட்டது. யார் யார் வியாபாரம் பேசினோம் என்றால் எங்கள் ஊர் கவுண்டர் சாமிநாதன், ஜெயசீலன், பரிமேலழகன், நான் ஆகியோர் பேசினோம். எங்கு வைத்து பேசப்பட்டது என்றால் வேலு வீட்டில் வைத்து பேசினோம்.

2. எவ்வளவு தொகைக்கு வியாபாரம் பேசப்பட்டது என்றால் ஏக்கர் மூன்று இலட்சம் என்று பேசினோம். எத்தனை ஏக்கர் என்றால் 3 ஏக்கர். வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து எங்கு உள்ளது என்றால் அக்ரஹரம் பஞ்சாயத்தில் உள்ளது. அந்த தாவா சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பிரதிவாதி வேலுவை எவ்வளவு நாளாக தெரியும் என்றால் அவரை சிறுவயதில் இருந்தே தெரியும். வேலுவிற்கு மொத்தம் எவ்வளவு சொத்து உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

விலைபேசியது எப்பொழுது என்றால் தேதி மாதம் தெரியவில்லை, 2016 ம் வருடம். அவ்வாறு வியாபாரம் பேசிய பிறகு பத்திரம் எப்பொழுது பதியப்பட்டது என்றால் வியாபாரம் பேசிய அன்றே பத்திரம் பதியப்பட்டது. பத்திரம் பதியும் போது யார் யார் இருந்தது என்றால் நான், சாமிநாதன், ஜெயசீலன், பரிமேலழகன் ஆகியோர் இருந்தோம். அந்த பத்திரத்தில் யார் யார் கையெழுத்து செய்தது என்றால் நான், சாமிநாதன், ஜெயசீலன் ஆகியோர் கையெழுத்து போட்டோம், வேறு யார் கையெழுத்து போட்டது என்று எனக்கு நினைவில்லை.

3. வியாபாரம் பேசுவதற்கு யார் என்னை அழைத்தது என்றால் வேலு அழைத்தார். ஒப்பந்த பத்திரத்தில் எத்தனையாவதாக நான் கையெழுத்து போட்டேன் என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. அந்த பத்திரத்தை வாங்கி வந்தது யார் என்றால் ராஜிவ் காந்தி வாங்கி வந்தார். அந்த சொத்து வேலுவிற்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அவருடைய தாத்தா கொடுத்த சொத்து. வேலுவிற்கு எத்தனை குழந்தைகள் என்று தெரியுமா என்றால் 2 பெண் குழந்தைகள். அந்த குழந்தைகள் அந்த பத்திரத்தில் ஏதாவது கையெழுத்து செய்தார்களா என்றால் இல்லை. அந்த ஒப்பந்த பத்திரம் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் மதியம் 3 மணிக்கு. அந்த பத்திரத்தை யார் எழுதியது என்றால் சாந்தி என்பவர் எழுதினார். நான் அந்த ஒப்பந்த பத்திரத்தை ஏதாவது படித்து பார்த்தேனா என்றால் நான் எதுவும் படித்து பார்க்கவில்லை. நான் படித்து பார்க்காமல் கையெழுத்து மட்டும் போட்டேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

4. வேலு என்பவர் 2 இலட்சம் வாதி ராஜிவ்காந்தியிடம் கேட்டிருந்தார், அந்த கடன் பொறுப்புக்காக தான் அந்த ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, நிலம் விற்பனை செய்ய பேசிதான் அந்த ஒப்பந்தம் போடப்பட்டது. ஒப்பந்த சொத்தானது அரூர்–தருமபுரி தார்சாலையில் அக்ராஹரத்தில் சாலையின் வடக்குபுறம் உள்ளது என்ற சொன்னால் சாலையை ஒட்டி மேய்ச்சல் புறம்போக்கு உள்ளது அதை ஒட்டி அந்த சொத்து உள்ளது. அந்த சொத்து எவ்வளவு விலை போகும் என்று எனக்கு ஏதாவது தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. ராஜிவ் காந்தி எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவு இல்லை, எனது நண்பரின் மகன். ஒப்பந்தம் போடப்பட்டதாக சொல்லும்போது அதில் வாய்தா தேதி எவ்வளவு நாள் போடப்பட்டது என்றால் 3 மாதம் போடப்பட்டது. நான் எந்த தேதியில் கிரையம் செய்து கொடுக்க சொல்லி வேலுவிடம் கேட்டேன் என்றால் தேதி எனக்கு நினைவில்லை, 2, 3 முறை கேட்டேன். யார் யார் எல்லாம் கேட்டோம் என்றால் நான், சாமிநாதன், ஜெயசீலன், பரிமேலழகன் மற்றும் எங்கள் ஊரை சார்ந்த முத்து மற்றம் 10, 20 பேர் சேர்ந்து தான் கேட்டோம். நான் சொல்வது பொய்யானது நான் சொன்னதுபோல ஒருநாளும் வேலுவை அணுகி கிரையம் செய்து கொடுக்க சொல்லி கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. வாதி ராஜிவ்காந்தி எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரியல்ல. பிரதிவாதி வேலு ராஜிவ்காந்தியிடம் கடனாக தான் ரூபாய் இரண்டு இலட்சம் பெற்றார் அந்த கடன் பொறுப்புக்காக தான் ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது, நான் அந்த

ஒப்பந்த பத்திரத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.07.29 16:28:11 +0530